REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 12உ புதன் (26—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 13உ வியாழன் (27—6—57) [இதழ் 10

இரயில்களில் அளவு மீறிய கூட்டம்

குறைப்பதற்கு நடவடிக்கை

அகமதாபாத்—

" மூன்றும் வகுப்புப் பெட்டிகளில் பிரயாணிகள் அளவுக்கு மீறி அடைக்கப்படுவது தடுக்கப்படாவிட்டால், இரயில்வே நிர்வாகத்தின் அந்தப் போக்கிற்கு எதிராக பிரயாணிகள் நேரடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிவரும்"

என்று, குசராத்—சௌராஷ்டிரப் பிரதேச இரயில் பிரயாணிகள் சங்கத் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(4-ம்பக்கம் பார்க்க)

அசாம் மந்திரிகள் பேசும் 'தேசீய பாஷை' காமராசர் வாயில் வராதது ஏன்?

தோண்டாத எண்ணெய் கிணற்றுக்கு அமளி துமளி அங்கே!

வளம் கொழிக்கும் மலைப் பகுதிகள் பறிபோனால் என்ன என்றபேச்சு இங்கே!

பாரதம் ஒன்றுதான் என வாதிடுவோர் தங்கள் நெஞ்சத்திற்கு பதில் கூறிக் கொள்ளட்டும்!

சென்னைக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

" பாரதம் ஒரே நாடு; இமயம்முதல் குமரிவரை இந்தியா ஒரே நாடு; அதனைப் பிரிப்பது கூடாது—ஆகாது; என்று நம்மிடத்தில் வாதாடுகிறார்களே அவர்கள், சற்று அசாமைப் பார்க்கட்டும்.

" அசாமில் கடந்த பத்துப் பதினைந்து நாட்களாக பெரிய அமளி துமளி நடைபெறுகிறது. காரணம், அங்கே ஒரு எண்ணெய் தொழிற்சாலை நிறுவ டெல்லி சர்க்கார் மறுத்துவிட்டதுதான்.

" இந்தச் சம்பவங்களைப் பார்த்துவிட்டு நம்மிடம், ' வடநாடு—தென்னாடு என்று பிரித்துப் பேசுவது கூடாது; என்று வாதாடுகிறவர்கள் நமக்கும், தங்கள் நெஞ்சத்திற்கும் பதில் சொல்லிக் கொண்டாக வேண்டும்.

" 'எண்ணெய் தொழிற்சாலையை இங்கேயேதான் வைத்தாக வேண்டும்; இன்றேல், இராஜிநாமா செய்வோம்' என்று அசாம் மந்திரிகள் எங்கோ இருந்துகொண்டல்ல—டெல்லி சென்று, எவரிடத்திலோ அல்ல—டெல்லி சர்க்கார் மந்திரிகளிடத்தில் கூறுகிறார்கள்.

" 'எண்ணெய் தொழிற்சாலை எங்கள் மாநிலத்தில் வேண்டும்' என்று கோரி அந்த நாட்டு காங்கிரசார் கொண்டுள்ள ஆத்திரம்—ஆங்ரோஷம்—தியாகபுத்தி ஆகியவை இந்த நாட்டுக் காங்கிரசாருக்கு நூற்றிலொரு பங்கேனும் இருந்திருந்தால் ....!

"பாரதமாதாவின் பிரும்மாண்டமான உடலில் பீகாரும் ஒரு அங்கம்தான்—அசாமும் ஒரு அங்கம்தானே! தொழிற்சாலை பீகாரில் இருந்தால் என்ன—அசாமில் இருந்தால் என்ன? பீகாரும் பாரதமாதாவின் அங்கம்தானே! அங்கேதான் இந்த எண்ணெய் தொழிற்சாலை அமைந்துவிட்டுப் போகட்டுமே என்ற எண்ணம், ஏன் அசாம் மக்களுக்கு—குறிப்பாகக் காங்கிரசாருக்கு இல்லை? அங்கே அவர்கள் தங்கள் மாநிலத்தில் தொழிற்சாலை வேண்டும் என்பதற்காக, பதவியையும் துச்சமென மதிக்கிறார்கள்.

"ஆனால் இங்கோ? 'தேவிகுளமா, பீர்மேடா? போனால் போகட்டுமே! அங்கிருந்தால் என்ன—இங்கிருந்தால் என்ன?' என்று பேசுகிறார்கள், காமராசர்கள்!

"அசாமிலாவது தோண்டப்படாத கிணற்றுக்காக—உருவாகாத தொழிற்சாலைக்காக இந்தக் கிளர்ச்சி! ஆனால் இங்கோ? தேவிகுளம்—பீர்மேட்டில் காப்பியும் தேயிலையும், அகிலும் சந்தனமும், இன்னபிற வளங்களும் கொள்ளை கொள்ளையாய்க் கிடைக்கிறது. 'இந்தப் பகுதிகள் அங்கிருந்தால் என்ன?' என்கிறார் காமராசர்! ஆனால், தோண்டப்படாத எண்ணெய்க் கிணறுக்காக அசாம் மந்திரிகளோ, 'பதவியையும் இராஜிநாமா செய்வோம்' என்று பேசுகிறார்கள்! அவர்களையும் பாருங்கள்—இங்குள்ள காமராசர்களையும் பாருங்கள்!

" வீட்டிற்குள் கள்ளர் புகுந்து சாமான்களை எல்லாம் திருடி மூட்டை கட்டும்போது ஒருவன் சொல்கிறான்—'இந்த வெள்ளிச் சாமான்களை, தங்க நகைகளோடு சேர்த்துக் கட்டுகிறாயே'—என்று! மற்றவனோ, 'வெளியில் போய் எல்லாவற்றையும் பிரித்துக்கொள்ளலாம்' என்கிறான்; இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டே படுத்திருக்கிற வீட்டுக்குரியவனோ; 'நம்மை ஒன்றும் செய்யாமல் அவர்கள் போனால் போதும்; எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லட்டும்' என்று கருதுகிறான். அந்த வீட்டுக்காரனைப்போல் காமராசர், 'தமிழ் நாட்டிலிருந்து எவர் வேண்டுமானாலும்—எதை வேண்டுமாயினும் எடுத்துச் செல்லட்டும்; நாம் பதவியிலிருக்கிறவரையில் இலாபம்' என்று கருதுகிறார்!

" அசாம் மந்திரிகள் பேசுகிற 'தேசீய பாஷை' காமராசர் வாயில் வரவில்லையே ஏன்?"

—என்று, அண்ணா அவர்கள், 24—6—57 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். அவரது சொற்பொழிவின் இதர பகுதிகள் நாளை வெளிவரும்.

★

நிகழ்ச்சி

சென்னை-சிந்தாதிரிப் பேட்டை முனுசாமி நினைவு மன்றத் துவக்க விழா 24—6—57 திங்களன்று மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

விழாக் கூட்டத்திற்கு தோழர் கணேசன் தலைமை தாங்கினார்.

தோழர் பி. ஏ. மூர்த்தி மன்றத்தைத் திறந்து வைத்தார்.

தோழர் க. அன்பழகன் எம். எல். ஏ; அவர்கள் தொகுதியில் தனக்கு வெற்றி தேடித் தந்தவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தேர்தலுக்குப்பின் கழகம் பெற்றுள்ள வளர்ச்சி குறித்தும், அரசியல் நிலை குறித்தும் விரிவுரை ஆற்றினார்.

அடுத்து அண்ணா அவர்கள், குழந்தைகளுக்கு பெயர்சூட்டினார்கள்.

அண்ணா அவர்களுக்கும், தோழர் அன்பழகன் அவர்களுக்கும் பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அண்ணா அவர்கள் அரியதோர் கருத்துரை ஆற்றினார்கள்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து, கருத்துரை கேட்டுப் பயன் பெற்றனர்.

கல்வி இலாகாவில் சிக்கன நடவடிக்கை

மத்திய அமைச்சர் தீவிரம்

'வெளிநாடுகளுடன் கலாச்சார உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்குடன் ஆலோசனைக்குழு, மற்ற காரியங்களுக்குச் செலவிடப்படும் செலவை சாத்தியமான அளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று மத்திய கல்வி அமைச்சர் ஆசாத் தனது இலாகாவுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார் என்று தெரியவருகிறது.

மேலும் எந்தெந்த வகைகளில் சிக்கனத்தைக் கையாள முடியும் என்பதை இலாகா அதிகாரிகளுடன் ஆசாத் ஆராய்ந்து வருகிறாராம்.

போலீஸ் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுமாம்!

ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்தத் திட்டமாம்

ஹைதராபாத், ஜுன் 25—

குற்றவாளிகள், அவர்கள் மேற்கொள்ளும் முறைகள் மற்றும் குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட இதர தகவல்கள் ஆகியவற்றை சேகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு மாநிலத்திலும் போலீஸ் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படுமாம்.

குற்றங்களை ஒடுக்குவதற்கான வழிகளை இந்த நிலையம் ஆராய்ந்து அறிவிக்குமாம்.

முக்கியமான குற்றவாளிகளின் படங்களையும் இந்த நிலையம் சேகரிக்குமாம்.

மாநிலங்களில் உலவி வரும் கொள்ளைக் கூட்டத்தினரை இந்த நிலையம் கவனித்து வருமாம்.

தமிழில் பாடம் கற்றுத்தர ஆந்திர அரசு உத்திரவு

ஐதராபாத், ஜுன் 25—

ஆந்திர மாநிலத்தில் உள்ள தமிழ் மாணவர்களின் வசதியை முன்னிட்டு ஒரு பள்ளியில் தமிழில் பாடங்களைக் கற்றுத் தர ஆந்திர அரசாங்கம் உத்தரவு உத்திரவு பிறப்பித்துள்ளதாம்.

யூகோவுக்கு எதிராக ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் துஷ்பிரசாரம்

டிட்டோவின் வன்மையான கண்டனம்

பெல்கிரேட், ஜுன் 25—

யூகோஸ்லேவியாவின் சுதந்திரமான அன்னிய நாட்டுக் கொள்கையையும், அதன் அரசியலையும் குறித்து அவதூறான பிரச்சாரம் செய்வதாக ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்மீது, குடியரசுத் தலைவர் டிட்டோ குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

" ஒருபுறம் நட்புறவும் கூட்டுறவும் வேண்டுமெனப் பேசிக்கொண்டு, இந்த நாடுகளின் தலைவர்கள் மறுபுறம் யூகோவில் முதலாளித்துவமும், அராஜகமும், பழைய ஏற்பாடுகளும் திரும்புவதாகக் குற்றம்சாட்டுகின்றனர். இது போன்ற முறை நட்புறவானதல்ல; மாறாக, பொறாமையால் எழுப்பப்படும் அவதூறாகும் "

என்று டிட்டோ கூறியிருக்கிறார்.

ஒரு மாதத்திற்கு முன்புதான் டிட்டோ, 'ரஷ்யா தலைமையில் யூகோவுக்கு எதிராக நடத்தப்பட்டு வந்த துஷ்பிரச்சாரம் நின்றுள்ளது; உறவுகள் இப்போது சீராகி வருகின்றன' என்று கூறியிருந்தார். ஆனால் இப்போது மீண்டும், 'ரஷ்யா, மற்றும் இதர சோஷலிச நாட்டுத் தலைவர்கள், உதட்டளவில், யூகோவின் ஒத்துழைப்பையும், நட்பையும் கோரிவிட்டு, கட்சிக்காரர்களுக்கு, யூகோவுக்கு எதிரான பிரச்சாரத் திலிறங்கும்படி உத்தரவு பிறப்பிக்கிறார்கள்' என்றும் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

புதிய வரிகள் கூடாது என்றால்...!

'திட்டத்தின் அளவு சுருக்கப்பட வேண்டும்'

முன்னாள் நிதி மந்திரி தேஷ்முக் கருத்து

சாங்லி, ஜுன் 24—

"புதிய வரி விதிப்புகள் கூடாது என்றால், திட்டத்தின் அளவு சுருங்க வேண்டியது அவசியமாகும்"

என்று முன்னாள் நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் கருத்தறிவித்திருக்கிறார்.

"இராணுவச் செலவு அதிகரித்துவிட்டது; அந்நிய செலாவணி சுருங்கி விட்டது; விவசாய உற்பத்தி ஒன்றும் எதிர்பார்த்த அளவு அதிகரிக்கவில்லை; எனவே, புதிய வரிகள் விதித்திருக்கிறார்கள். இந்த வரி விதிப்பைத் தாங்கிக்கொள்ளும் மனநிலையில் மக்கள் இல்லாவிடின், திட்டத்தின் இலட்சிய அளவுகள் மாற்றப்பட வேண்டுவது அவசியமாகிவிடும்"

என்றும் தேஷ்முக் கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—6—57 புதன்

கிளர்ச்சி தரும் பாடம்

வடநாட்டவர், தங்கள் உள்ளத்தில் வளர்ந்துவரும் இன, இந்தி மொழி வெறி உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்க அரும்பாடுபடுகின்றனர்; என்ருலும், சிற்சில நேரங்களில் அந்த வெறி, தன் பேயாட்டங்களை அரங்கேற்றத் துவங்கிவிடுகிறது, அவர்களையும் அறியாமல்!

சிலர், தங்களை மக்களின் கவனத்தில் நிறுத்திக்கொள்வதற்காக இம்மாதிரி வெறியுணர்ச்சிகளை மறைத்துக்கொள்ள முயற்சிக்கும் பேதமையைப் பகிரங்கமாகச் சாடி, 'சபாஷ்' பட்டமும் பெற்றுவிடுகின்றனர்.

வடநாட்டவருக்கு, வரலாற்றில் வேறெப்போதும் கிடைக்காத ஓர் பெருமை—தென்னட்டவரை அடிமை கொண்டு அடக்கி ஆளும்பெருமை—இபோதுதான் கிடைத்திருக்கிறது; இந்த நிலை அவர்களுக்குத் தந்திருக்கும் அகந்தையை, டெல்லி சர்க்காரின் ஒவ்வொரு சிறு நடவடிக்கையிலும், டெல்லிப் பெரியவர்களின் ஒவ்வொரு சொல்லிலும காணவும்—கேட்கவும் முடியும்.

இந்த அகந்தைதான் அவர்களது இன, மொழிவெறி கொழுந்து விட்டெரிவதற்குத் தூண்டுகோலாகவும் இருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்து அரசியலில், இந்திமொழிக்கு ஆட்சிமொழி என்ற தகாத அந்தஸ்தினை சட்டரீதியாகச் சொந்தமாக்கிக் கொண்ட வடநாட்டவர், அந்தச் சட்டம் விதித்த காலவரையறையைக் கூடப் பொருட்படுத்தாமல் இந்திமொழித் திணிப்பைத் தீவிரப்படுத்துவதற்கும் அவர்களது அகந்தைதான் காரணம் எனக்கொள்ள நிரம்ப இடம் உண்டு.

அகந்தையால், நேர்மையிலிருந்து நெடுந்தூரம் வழி விலகிச் சென்று கொண்டிருக்கும் அவர்கள், இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்துவதற்குப் பிரதானமான காரணமாக நமக்குத் தெரிவதெல்லாம், 'ஏக இந்தியா,' என்ற அரசியல் அமைப்பு எப்படியாவது நிலை பெற்றுவிடவேண்டும் என்ற அவர்களது பேராசைதான்!

'ஏக இந்தியா'தானே அவர்களுக்கு, தங்களது தோல்விகளை மிகுந்த—படையெடுத்தவருக்கெல்லாம் பல்லாண்டு பாடிய—வரலாற்றில் இல்லாத 'பெருமை'யைத் தேடித்தந்திருப்பது! அந்த அரசியல் அமைப்பு நீடிப்பதில்தானே அவர்களது போலிப் பெருமையும், சுகபோகமான வாழ்வும் தொக்கி நிற்கின்றன?

இதைத்தவிர, இந்தி மொழித் திணிப்பிற்கு, இத்தனை மனோவேக நடவடிக்கைகளுக்கு, ஒப்புக்கொள்ளக்கூடிய நியாயமான காரணம் எதுவாக இருக்க முடியும்?

ஆட்சியிலிருக்கும் வடநாட்டுப் பெரியவர்கள், தங்களது இன, மொழி வெறி கொண்ட இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக எழக்கூடிய குற்றச்சாட்டுகளை வலிமை குன்றச் செய்யவே, தங்களது சகாக்கள் உள்ளத்தில் வளர்த்துவரும் கொடிய மொழி, இனவெறி உணர்ச்சிகளை, வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது என்று எதிர்பார்க்கின்றனர்.

ஆனுல், ஆட்சியிலிருப்பவர்களின் இந்த ராஜரீகம், ஆட்சிப் பொறுப்புக்கு வெளியிலிருக்கும் தங்களின் சகாக்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; எனவே அவர்கள், 'தீவிரம் போதாது; திணிப்பு இன்னும் பலவந்தமாக வேண்டும்; துரிதமாக விரிவுபட வேண்டும்' என்று வெறிகொண்டு கூவிவிடுகின்றனர்.

பண்டிதர்களும், 'இந்த மனிதர்கள் காரியத்தைக் கெடுத்துவிடுகிருர்களே; நமது கபட நாடகத்தின் முடிவை, இடையிலேயே அவசரப்பட்டு, 'தவருனது' என்று குற்றஞ்சாட்டுகிருர்களே' என்ற ஆத்திரத்தில் அவர்களை அடிப்பது போல அடிக்கிருர்கள்!

இதுமட்டுமல்ல — இந்த டெல்லிப் பெரியவர்கள் வேறு சில தந்திரங்களையும் கையாளுகிருர்கள். 'தென்னுட்டு மொழிகளில் ஒன்றினை வடநாட்டவர் கற்கவேண்டும்' என்று மாறி மாறி பண்டிதர்கள் உபதேசம் பண்ணுவது அந்தத் தந்திரங்களுள் ஒன்று. அண்மையில் கூட பண்டிதர், அப்படி ஒரு உபதேச மொழி பகன்றிருக்கிருர். இப்படி உபதேசம் செய்வதின் மூலம் வடநாட்டவருக்கும்—தென்னுட்டவருக்கும் இடையில் இருக்கும் 'வேறுபாடுகள்' என்னும் ஆழமான பிளவுக்கு, 'ஒட்டு' போட்டுவிடலாம் என்றும், வடநாட்டவரின் ஆதிக்கத்திற்கு எதிராக தென்னுட்டில் வளர்ந்துவரும் எதிர்ப்பின் வேகத்தைத் தடுத்துவிடலாம் என்றும் நெடுங்கனவு காண்கிருர்கள் போலும்!

இதேபோன்ற தந்திரங்களுள் மற்ருென்றுதான், 'குடியரசு'த் தலைவரான இராசேந்திர பிரசாத் அவர்கள் மேற்கொள்ளும், தென்னுட்டு 'உலா'க்களும்!

ஆனுல், இவர்களது இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னுல் பேயுருவாய் நிற்கும் இவர்களது அகந்தையை—நீடித்த ஆதிக்க ஆசையை, இந்த நாட்டு மக்களின் கூறிய கண்கள் சிரமமின்றிப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்த நாட்டு மக்களில் அந்தப் 'பேயுரு'வங்களைக் காண முடியாத அல்லது காண மறுக்கிறவர்களுக்காகத்தானே என்னவோ, பஞ்சாபில் இந்திவெறியர் சிலர், 'கிளர்ச்சி' நடத்திக் கொண்டிருக்கிருர்கள்.

அந்தக் கிளர்ச்சிக்காரர்களின் நோக்கத்தையும், கிளர்ச்சிக்காக அவர்கள் கூறியுள்ள காரணங்களையும் முன்பே இங்கு எழுதியிருந்தோம்.

அந்தக் கிளர்ச்சி இங்குள்ள தமிழரில் இன்னும் விழிப்புணர்வு பெருதவர்களுக்கு, வடநாட்டவரின் இந்தி வெறி உணர்ச்சி எத்தகையது என்பதை அறிய துணைபுரியும் என்றே கருதுகிருேம்.

நீர்ப்பாசனத் திட்டங்கட்கு முதலிடம்

அதிக உணவு உற்பத்தியை எதிர்பார்க்கிருர்களாம்!

ஐதராபாத், சூன் 24—

முடியும் தருவாயிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுக்குத் தேவைப்படும் உருக்கும் சிமெண்டும் முதலில் விநியோகம் செய்யப்படுமாம். அதிக உணவு உற்பத்தியை எதிர்பார்த்தே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

செயற்கைப் பலகை தயாரிப்புத் தொழிற்சாலை

ரூ. 10 இலட்சம் செலவில் நிறுவ ஆந்திர அரசினர் திட்டம்

கொத்தகூடம், சூன் 24—

மாநிலத்தில், மலைசாதியினர் வாழும் வீடுகளின் கூறைகள் ஓலைகளால் அமைப்பது ஆபத்தை விளைவிப்பதுடன் தீயின் காரணமாக அடிக்கடி சேதமும் ஏற்படுகிறது.

இந்த அவல நிலையைத் தடுக்க செயற்கை முறையில் பலகைகள் (பிளைவுட்) தயாரிக்க ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த ஆந்திர மாநில அரசு முடிவு செய்துள்ளதாம்.

இந்தக் கோடைக் காலத்தில் மட்டும் 13 தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது என்றும் 300 குடும்பங்கள் குடியிருப்பு வசதியை இழந்து அவதியுற்றது என்றும், மொத்தம் ரூ. 37,000 மதிப்புக்கு சேதமேற்பட்டுள்ளது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 10 இலட்சம் செலவிடப் படுமாம்.

காரணம் என்னவோ?

மாதந்தோறும் ரூ. 5 இலட்சம் நஷ்டம் ஏற்படுவானேன்?

பம்பாய், சூன் 24—

பம்பாய் துறைமுகத்தில் நாள் ஒன்றுக்கு 8,000 டன் சரக்கு இறக்குமதி செய்யப்படவேண்டும்; ஆனுல், இப்போது 5,000 டன் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகிறதாம்.

இதனுல் கப்பல்கள் வெகு நாட்கள் தங்கவேண்டியுள்ளதென்றும் வீண் காலதாமதம் ஏற்படுகிறதென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இதனுல் இந்திய அரசாங்கத்திற்கு மாதம்தோறும் ரூ. 5 இலட்சம் நஷ்டமேற்பட்டுவருகிறதாம்.

சென்னை கைத்தறி திட்டங்களுக்குக் கடனுதவியாம்!

பம்பாய், சூன் 24—

சென்னை மாநிலத்திற்கான 5 கைத்தறித் திட்டங்களுக்கு ரூ. 4,05,500 கடனுகவும், ரூ. 83,000 மட்டும் மானியமாகவும் இந்திய அரசாங்க துணி ஆணையாளர் நியமித்த குழு அங்கீகரித்துள்ளதாம்.

19,500 கைத்தறியாளர்களைக் கொண்ட கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்துவது ஒரு திட்டமாம்.

முன்னேற்றம் அடைந்துள்ள துணி ரகங்களில் 100 கைத்தறி நெசவாளருக்கு பயிற்சி தரப்படுமாம்.

10 சில்லரை விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்.

பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 50 வீதம் 'ஸ்டைபெண்டு' தரப்படுமாம்.

இந்தியா அணுகவில்லையாம்

பம்பாய், சூன் 23—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகபிரிட்டனிடமிருந்தோ, அமெரிக்காவிடமிருந்தோ அந்நிய செலாவணி கடன் எதையும் பெறுவதற்கு இந்திய அரசாங்கம் முயற்சிக்கவில்லை" என்று இந்தியப்பேரரசின் நிதிஅமைச்சர் கூறியுள்ளார்.

'பலாத்காரத்தின் மூலம் திராவிட நாடு பெற தி. மு. க. விரும்பவில்லை'

'சட்டபூர்வமாக வெற்றிபெற சட்டமன்றத்தில் பாடுபடுவோம்'

'முதலாளித்துவத்துக்கும் இந்து மத அமைப்புக்கும் அடிப்படையில் வித்தியாசமுண்டா?

சேலம் சிறப்புக் கூட்டத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. முழக்கம்

சேலம், சூன் 24—

சேலம்-கிச்சிப்பாளையத்தில் 23—6—57-ந் தேதியன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள், 'அன்றும் இன்றும்,' என்ற பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"முன்பு இதிகாசகாலம்; இப்பொழுது 20-ம் நூற்ருண்டு. இதிகாச காலத்தில் திராவிடர்கள் குரங்குகளாகக் காட்சியளித்தார்கள். திராவிடர்களாக இருந்த வாலி, சுக்ரீவன் ஆகியவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. இதிகாச காலத்தில் இருந்த திராவிடர்களுக்கும், 20-ம் நூற்ருண்டில் இப்பொழுது இருக்கும் திராவிடர்களுக்கும் வித்தியாசமில்லாமல் இருக்கிறது. இதிகாச காலத்தில் எப்படி திராவிடர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டிருந்தார்களோ, அதே போன்றுதான் இன்றும் திராவிடர்களுக்குள் பிளவு இருக்கிறது.

"திராவிட முன்னேற்ற கழகம் அரசியல் ரீதிப்படி வளர்ந்து வருகிறது. முதல் வகுப்பு படித்தவுடன் 8-வது வகுப்பு படிக்கும் மாணவனைப்போல் அல்ல—படிப்படியாக வகுப்புகளில் படித்து தேர்ச்சியுறும் மாணவனைப்போல தி. மு. கழகம் முறையாக வளர்ந்து வருகிறது. ஆகவே, தி. மு. கழகத்தை அழித்துவிட வேண்டும் என்று யாராவது எண்ணினுல் அது நடவாத காரியமாகும்.

"மனதில் உள்ளதை நாம் அப்படியே மறைக்காமல் வெளியில் மக்களிடம் சொல்லுகிருேம்—சொன்னதைச் செய்கிருேம். எடுத்தவுடனேயே நாம் அரசியலைப்பற்றிப் பேசவில்லை—சமுதாயத்தைப் பற்றி பேசினேம். பிறகு படிப்படியாக அரசியலைப் பற்றி பேசுகிருேம்.

"சட்டசபையில் தி. மு. கழக எம். எல். ஏ.-க்கள் 15 பேர் என்ன செய்ய முடியும் என்று கேட்கிருர்கள். சட்டசபையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள்தான் என்ன செய்யமுடியும்? சட்டசபையில் இன்ன முறைப்படிதான் நடக்கவேண்டும் என்ற வரம்பு உள்ளது. ஆகவே அந்த சட்டப்படிதான் காங்கிரஸ், தி. மு. கழக எம். எல். ஏ.-க்கள் நடக்கமுடியும்.

"150 பேர் உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால் காங்கிரஸ்காரர்கள், பெரும்பான்மையாகக் கைதூக்கப் பயன்படுமே தவிர, வரம்பை மீறி வேறு எதை அவர்களால் செய்யமுடியும்? 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கக்கோரி சட்டசபையில் தீர்மானம் வந்தது; நாங்கள் ஆதரித்தோம். ஆனுல் அதை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள்—தோற்றது. அதனுல் என்ன? அதைப்பற்றி மக்களிடத்தில் சொல்லுகிருேம்; சட்டசபை நடவடிக்கைகளை மக்கள் தெரிந்துகொள்ளட்டுமே! எங்களை சட்டசபையில், 'பேசாதே' என்று அவர்களால் சொல்ல முடியுமா?

"சட்டசபைக்குப் போனுல் திராவிட நாடு கிடைக்குமா என்று கேட்கிருர்கள்; சட்டசபைக்குப் போகாமல் வேறு எங்கு போனுல் திராவிட நாடு கிடைக்கும்? பலாத்காரம் செய்தோ அல்லது சட்டத்திற்கு உட்பட்டோதான் திராவிட நாடு பெறமுடியும். பலாத்காரம் செய்து திராவிட நாடு பெறுவதை தி. மு. கழகம் விரும்பவில்லை. திராவிட நாடு பெற, சட்டத்திற்குட்பட்ட செயல்களைச் செய்யத்தான் நாங்கள் சட்டசபைக்குச் சென்றுள்ளோம். தமிழ் நாட்டிற்கு பலாத்காரம் உகந்த செயல் அல்ல!

"இராமன் ஆண்டால் என்ன? அல்லது இராவணன் ஆண்டால் என்ன? நமக்கு சாப்பாடு வேண்டும் என்பது, நம் நாட்டு மக்களின் போக்கு. ஆகவே, பலாத்காரமோ அல்லது புரட்சியோ இந்நாட்டில் செய்து வெற்றி காணமுடியாது.

"தீண்டாதே—என்று உயர் ஜாதிக்காரன் கூறினுல், 'தண்டனை' என்பதை விளக்க ஒரு உச்சிக் குடுமி மனிதனையும், மற்ருெரு தாழ்த்தப்பட்ட மனிதனையும் கொண்ட படத்தை காமராசர் சர்க்கார் அச்சிட்டு வெளியிட்டது. அதைக் கண்டு பிராமணர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள்! உடனே காமராசர் சர்க்கார் அந்த படத்தை மேலும் வெளியிடாமல் நிறுத்திக்கொண்டது. ஆனுல், உடனே தி. மு. கழகம் அப்படத்தைப்போல் அச்சடித்து எல்லா இடங்களிலும் ஒட்டியது; அதை யார் எதிர்த்தார்கள்? காரணம், நாம் சொன்னவைகளைச் செய்தோம்.

"பணம் இருந்தால் அந்தஸ்து வராது; நாட்டின் அடிப்படை மாற வேண்டும். ஏழை பணக்காரனுகலாம் — பணக்காரன் ஏழையாகலாம். ஆனுல் பறையன், பார்ப்பனனுக ஆகமுடியுமா? முடியாது.

"தொழிலாளி எந்தக் காலத்திலும் விழிப்படையாதபடி முதலாளித்துவம் தன்னைச் சுற்றி பாதுகாப்பு அமைத்துள்ளது.

"முதலாளித்துவத்துக்கும் இந்துமத அமைப்புக்கும் வித்தியாசமில்லை. நாம் கிறிஸ்துவனுகவோ, முஸ்லீமாகவோ மாறலாம்; ஒருவன் இந்து மதத்தில் சேரவேண்டுமென்ருல் எந்த ஜாதியில் அவனைச் சேர்ப்பது? இந்து மதத்தில் புதிதாகச் சேருபவர்கள் தனி ஜாதியாக வளருவார்கள். ஏன்? இந்து மதத்தில் அவ்வளவு ஜாதிகள் உள்ளன. முதலாளித்துவத்தின் ஆணிவேரை அறுக்க இந்து மதத்தின் அடிப்படைகளை மாற்ற வேண்டும்.

"ஆந்திராவில் பொட்டி ஸ்ரீராமுலு உண்ணுவிரதம் இருந்து இறந்தபின் 'புரட்சி' ஏற்பட்டது. இரயில்வே ஸ்டேஷன்கள் கொள்ளையடிக்கப்பட்டன — ஆந்திரம் தனியாகப் பிரிந்தது.

"சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயர்வைக்கக் கோரி உண்ணுவிரதம் இருந்து சங்கரலிங்கனர் இறந்தார்; ஆனுல், நாட்டில் என்ன புரட்சி நடந்தது? தேவிகுளம்—பீர்மேட்டை தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்று கேட்டோம்; ஆனுல், தேவிகுளம் — பீர்மேட்டுடன் செங்கோட்டையையும் சேர்த்து பறி கொடுத்தோம். நாட்டில் என்ன புரட்சி நடைபெற்றது?"

பின்னர், தேர்தலுக்குப் பின் தி. மு. கழகம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை விளக்கி தோழர் அன்பில்-தருமலிங்கம் பேசினுர். (ந. நி.)

கழகச் செய்திகள்

வாழக்குட்டப்பட்டி:

18—5—57 காலை சேலம் மாவட்டம் வாழக்குட்டப்பட்டியில் தோழர் டி. எழுமலை தலைமையில், தோழர் அறிவுடைநம்பி அவர்கள் தி. மு. கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர்; தோழர் எ. ஆனைமுத்து கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்,

சுப்பிரமணியபுரம்:

19—5—57 காலை 9 மணிக்கு தோழர் நாராயணசாமி அவர்கள் கடையில் தோழர் ஆரோக்கியசாமி தலைமையில் சுப்பிரமணியபுரம் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் பெ. நடராசன் செயலாளராகவும், ம. நாராயணசாமி துணைச் செயலாளராகவும், கு. இளங்கோ பொருளாளராகவும் பெ. வரதராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவரங்கம்:

19—5—57 இரவு 7 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் டி. துரைசாமி இல்லத்தில் தோழர் எஸ். எம். வி. சாமி தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவுக் கணக்குகள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோழர் வடிவேலு அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சேலம் (17-வது வட்டம்)

19—5—57 மாலை நன்னையர் தெருவில் தி.மு. கழகக் கிளையை அண்ணா அவர்கள் துவக்கி வைத்தார்; தோழர் பி. வி. ரங்கையர் தலைமை வகித்தார் இ. ஆர். கிருஷ்ணன், மற்றும் பலரும் பேசினர்.

கீழ்நாச்சிகுளம்:

19—5—57 இரவு 7 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் மா. வடிவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்; தோழர்கள் சமதர்மம், செங்குட்டுவன், தா. ஆவுடையப்பன், நெடுஞ்செழியன், செல்லத்துரை, வே. பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கீழக்கரை:

19—5—57ல், இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கா. ச. சாந்தி உசேன் செயலாளராகவும், செ. ஜாபர் துணைச் செயலாளராகவும், ரா. கு. சு. ராமசாமி பொருளாளராகவும், வீ. நடராசன் மாவட்டச் செயலாளராகவும், 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுவை-குயவர்பாளையம்

19—5—57ல் நடைபெற்ற புதுவை தி. மு. க. செயற்குழுவில், குயவ பாளையத்தில் தி. மு. க. கிளை ஒன்று அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

கோட்டை:

19—5—57 காலை 10 மணிக்கு கோட்டை ஈசுவரன் கோவில் வீதியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் கோவை-செழியன் தலைமையில் கூடி, கோவை தென்னரசு செயலாளராகவும், பி. எம். எம். மைதீன் துணைச் செயலாளராகவும், ஏ. எஸ். எம். மைதீன் பொருளாளராகவும், 14 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கை-நாவலப்பட்டி:

19—5—57 மாலை கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நாவலப்பட்டி தி. மு. க. கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் நம்பிக்கை தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் க. ப. சிவம் கழகப் பணிமனையில் கொடியேற்றிவைத்தார்; க. கணபதி கழகத்தைத் துவக்கிவைத்தார்; பின்னர் தோழர்கள் கி. து. மதியழகன், சு. கா. சுந்தரராசன், இரா. அதி. மணி, இரா. திருமறவன், ஜி. சோமசுந்தரம் ஆகியோர் பேசினர்.

சேக்கிபட்டி:

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், சேக்கிபட்டியில் 20-5-57ல், தி. மு. கழகத் துவக்க விழா தோழர் மு. க. இளமொழி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் மாதவன், கே. சந்தானம் சொற்பொழிவாற்றினர். இரவு நாடகம் ஒன்று நடைபெற்றது. கழக நிர்வாகிகள் விவரம்:—செயலாளர்: ஆர். கே. பவுன்பாபு; துணைச்செயலாளர்: எம். மெய்யன்; பொருளாளர்: கே. பெரியசாமி; மாவட்டப் பிரதிநிதி: வி. பெரியதம்பி.

மணக்குடி:

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்த மணக்குடி தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் சொ. ப. கணேசன் தலைமையில் நடைபெற்றபோது கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; தோழர்கள் சோ. சோதண்டபாணி செயலாளர்; இரா. வேதையன் துணைச்செயலாளர்; ம. க. பழநிசாமி, சொ. கா. முருகையன் மாவட்டப் பிரதிநிதிகள்; சொ. கா. காளிமுத்து பொருளாளர்; செயற்குழு உறுப்பினர்கள் வெ. ச. கா. சம்பந்தமூர்த்தி, சொ. ப. கணேசன், அ. சேவகாமூர்த்தி, கோ. சுந்தரம், சு. சேது, சு. சபாபதி, கா. சம்பந்தமூர்த்தி.

இலுப்பக்குடி:

பெரம்பலூர் வட்ட இலுப்பக்குடி தி. மு. கழக 3-வது ஆண்டு விழா 20-5-57 மாலை 6 மணிக்கு தோழர் எம். புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் வடிவேல், பி. ஆர். ரத்தினசாமி, அரு. ஆதிமூலம், ஆர். முத்துசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இரவு 10-30 மணிக்கு கழக மன்றத்தாரால் 'நல்ல தீர்ப்பு' என்ற நாடகம் நடைபெற்றது.

தென் திருப்பேரை:

19—5—57ல், கழக உறுப்பினர் கூட்டம் தோழர் பன்னீர் செல்வம் இல்லத்தில் தோழர் சி. கே. சி. பாண்டியன் தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் பெ. முத்துமாலை; துணைச்செயலாளர் எஸ். ஏ. முத்து; பொருளாளர் எஸ். இசக்கி; மாவட்டப் பிரதிநிதிகள் கே. எஸ். மணி, கே. எஸ். பன்னீர்செல்வம். செயற்குழு உறுப்பினர்களாக 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுப்பட்டினம்:

22—5—57 மாலை 6 மணிக்கு பட்டுக்கோட்டை வட்டம் புதுப்பட்டினத்தில் தி. மு. க. துவக்க விழா பொதுக்கூட்டம் தோழர் ஆர். கே. பி. பிச்சைக்கண்ணு தலைமையில் நடைபெற்றது; தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கொடியேற்றிவைத்தார். தோழர்கள் என். எஸ். இளங்கோ, கே. எஸ். எம். கலாநேசன், கு. அடைக்கலம், எஸ். ராமையன், கே. எம். எஸ். ரசாக் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

* * *

23—5—57 பகல் 2 மணிக்கு தோழர் கே. எஸ். எம். கலாநேசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; தோழர்கள் கா. காமாட்சி செயலாளர்; ஆர். கே. பி. பிச்சைக்கண்ணு துணைச்செயலாளர்; எம். கே. காதர்முகைய்தீன் பொருளாளர்; கே. எஸ். எம். கலாநேசன் மாவட்டப் பிரதிநிதி; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்புவனம்:

25—5—57 இரவு 9 மணிக்கு தோழர் வை. பூபதி தலைமையில், நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 21-5-57ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஏர்வாடி:

24—5—57 இரவு 8½ மணிக்கு அண்ணா திடலில், தோழர் சிங்கை-எஸ். கந்தசாமி தலைமையில் தோழர்கள் சிவ. சேது, டபிள்யூ. டி. துரைசாமி, எ. பி. எம். அப்துல் காதர் ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் கழக இலட்சியம் பற்றி விரிவுரையாற்றினர்; அவருக்கு பல மன்றங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

'மூடப்பழக்கவழக்கங்களிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும்'

'தங்கள் வீரத்தையும் இழந்து ஆண்களையும் கோழைகளாக்கலாமா?'

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் முன்னேற வேண்டும்'

சேலம் சிறப்புக் கூட்டத்தில் தாய்க்குலத்திற்கு சத்தியவாணிமுத்து அன்பழைப்பு

சேலம், ஜுன் 25—

23—6—57-ல், சேலம் பாரத் டாக்கீசில் சேலம் நகராண்மைக் கழக உறுப்பினர் ஏ. மாரியப்பன் தலைமையில் தி. மு. கழகச் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல் ஏ., மு. கருணாநிதி எம்.எல்.ஏ., அம்பில்-தருமலிங்கம் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஏ. மாரியப்பன் எம்.சி., கூறியதாவது:—

"தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தி தொழிலாளர் மத்தியில் தொடர்புகொண்டு வேலை செய்ய தி. மு. கழகம் ஆரம்பித்துவிட்டதைக் கண்ட மாற்றுக் கட்சியினர் பொறாமைப்படுகின்றனர்.

"இந்தியப் பேரரசின் புதிய வரிகளைக் கண்டிக்காதவர்கள் இல்லை. அந்த வரிகளை எதிர்த்து ஜுலை 7-ல் கண்டன ஊர்வலம் நடத்தி, அந்தந்த ஊர்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பொதுச்செயலாளர் அறிக்கை விடுத்துள்ளார். அதற்கேற்ப சேலம் நகரிலும் ஜுலை 7-ந் தேதி வரி எதிர்ப்புக் கண்டன ஊர்வலம் நடத்த நகர தி. மு. கழகம்ஏற்பாடுகள் செய்துவருகின்றது."

கூட்டத்தில் பேசிய எல்லோருக்கும் மலர் மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும் நகர தி. மு. கழகச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் அணிவித்தார்.

'தமிழக மகளிர்' எனும் பொருள் பற்றி தோழியர் சத்தியவாணிமுத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பழைய காலத்தில் தமிழ்ப் பெண்கள் மிக்க வீரமாக இருந்தார்கள் என்று பேசப்படுகிறது; தமிழ்ப் பெண்கள் முறத்தினால் புலியை அடித்து விரட்டினார்கள் என்று பேசிப் பெருமைப்படுகிறோம். ஆனால் இப்பொழுது தமிழ்ப்பெண்கள் அவ்வாறு வீரமுடையவர்களாக இருக்கிறார்களா? என்றால், இல்லை.

"கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தான் என்று பலர் சொல்கிறார்கள்; ஆண்களைப் பற்றி சொல்வதில்லை; கற்பு என்பது இருபாலருக்கும் உண்டு—என்று தி. மு. கழகம் கூறுகிறது. ஆண்கள் மட்டும் இஷ்டம்போல சென்று சுற்றிவரலாமா? அது கூடாது. சில பெண்கள் தன் கணவன்மார்களால் கொடுமைப்படுத்தப்படுவதைத் தன் பெற்றோர்களிடத்தில் கூறினால் அந்த பெற்றோர்கள் அது உன் தலைவிதி அம்மா! 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழியைச் சொல்லி பெண்களை சாமதானப்படுத்துகிறார்களே தவிர, ஆண்களைத் திருத்துவதில்லை.

"பெண்களிடம் உள்ள பல மூடப் பழக்க வழக்கங்களை முதலில் ஒழிக்கவேண்டும். சில எத்தர்கள் வீதிகளில் வரும்போது திருமணம் ஆகாத பெண்களைப் பார்த்து, இந்தப் பெண்ணுக்கு ஏழரை நாட்டு சனியன் பிடித்திருக்கிறான் அதனால்தான் திருமணம் ஆகவில்லை. அரைபடி அரிசி, கொஞ்சம் மஞ்சள் தூள், ஒரு செம்பில் தண்ணீர்-கொண்டு வாருங்கள் என்று பெண்ணின் தாயிடத்தில்கூறுவார்கள். பெண்ணின் தாய்மார்களும் அவ்வாறே கொடுப்பார்கள். பிறகுஒருபழைய சேலையைக் கொடுங்கள். அதை வைத்து பூசை செய்துவிட்டு தருகிறேன் என்று கூறுவார்கள். அவ்வாறே பழைய சேலையை பெண்ணின் தாயார் கொடுப்பாள். இவற்றை எல்லாம்வைத்து பூசை செய்வதுபோல் சில மந்திரங்களை சொல்வான். தட்சிணையாக பணமும் வாங்கிக்கொள்வான். பிறகு அந்த மஞ்சளைக் கொடுத்து அதனை மூன்று வாரங்களுக்கு அப்பெண் அரைத்து பூசிக்கொண்டால் சீக்கிரமே ஏழரை நாட்டான் விலகிச் சென்றுவிடுவான். திருமணமும் விரைவில் நடைபெறும்என கூறுவார்கள். இவ்வாறு கூறிவிட்டு பழைய சேலை, செம்பு முதலியவற்றை எல்லாம் அவர்கள் எடுத்துச் செல்வார்கள். எப்படி அவற்றை திருப்பி கேட்பது ஒருவேளை அவற்றில் மந்திரத்தை ஜெபித்திருந்தால் என்ன செய்வதென்று அஞ்சி அவற்றைக் கேட்காமல் விட்டுவிடுவார்கள். இம்மாதிரி நிலையிலும் இன்னும் பெண்கள் இருக்கிறார்கள்.

"கண்ணகியின் கற்பைப் பற்றி பலர் எடுத்துப் பேசுகிறார்கள்; ஆனால்கண்ணகியின் மற்றகொள்கைகளை எடுத்துப் பேசுவதில்லை. கண்ணகி கற்புள்ளவள். கண்ணகி தன் கணவனைத் தவிர மற்ற கடவுள்களை வணங்குவதில்லை. தன் கணவன் பெயரையும், மாமனாரின் பெயரையும் தாராளமாக கண்ணகி சொன்னாள். ஆனால் இக்காலத்து பெண்கள் தங்கள் கணவன் பெயர்களைச் சொல்ல மறுக்கிறார்களே! கணவன் பெயரைச் சொல்வதால் ஒன்றும் தவறில்லை. இன்றைய

தொளசம்பட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

வடவரின் வஞ்சனையை விளக்கி தோழர் கண்ணன் உரை

சேலம், ஜுன் 25—

ஓமலூர் வட்டம் தொளசம்பட்டியில் 20—6—57 மாலை தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் கே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

'பகுத்தறிவு' ஆசிரியர் ப. கண்ணன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தீப்பெட்டி, காப்பி முதலிய பொருள்களுக்கு இந்தியப் பேரரசினர் புதிய வரிகளை விதித்தனர். இதை எதிர்த்து தமிழ்நாடெங்கிலும் திராவிட முன்னேற்றக் கழகம் பலத்த கண்டனக்குரல் எழுப்பியது. அதன் பிறகு, காப்பிக்கு விதிக்கப்பட்ட புதிய வரி வாபஸ் பெறப்பட்டது.

"சேலம் மாவட்டத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்பட வேண்டும் என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். வி. ராமசாமி இந்தியப் பேரரசின் அமைச்சர்களை அடிக்கடி சேலத்திற்குக் கூட்டி வந்து காண்பிக்கிறார்; அமைச்சர்களும் அடிக்கடி சேலம் வந்து பார்வையிட்டுச் செல்கிறார்களே தவிர, அலுமினியம் தொழிற்சாலை சேலம் மாவட்டத்தில் ஏற்படவில்லை.

"ஆனால், இதற்குப் பின் நடவடிக்கை எடுக்கப்பட்டு பக்ரா-நங்கல் அணைக்கட்டுக்கருகில் ஒரு கிராமத்தில் அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் 'வடக்கு வளர்கிறது—தெற்கு தேய்கிறது' என்று நாம் கூறுகிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது?

"தென்னாட்டை அடக்கி ஆளவே வடநாட்டார் விரும்புகிறார்களே தவிர, தென்னாட்டின் அபிவிருத்தி வேலைகளில் அதிக கவனம் செலுத்தவில்லை.

"சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகத்தின் செல்வாக்கு குறைந்துவிடவில்லை. சேலம் மாவட்டத்தில் மட்டும் புதியதாக 102 கிளைகள் ஏற்பட்டுள்ளன. தி. மு. கழகம் வேகமாக வளர்ச்சியுற்று மக்கள் ஆதரவைப் பெற்று வருகிறது என்பதை இது காட்டவில்லையா?"

அடுத்து, தோழர் கே. கே. சின்னுசாமி பேசினர்.

தீர்மானங்கள்

ஆரம்பப் பள்ளியை உயர்தர துவக்கப் பள்ளியாக மாற்றும்படி சேலம் மாவட்ட நாட்டாண்மை கழகத்தைக் கேட்டுக்கொண்டும், ஓமலூர் வட்டத்தில் மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சார விநியோகம் செய்யுமாறு மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெண்கள் தங்கள் வீரத்தை இழந்து ஆடவர்களையும் கோழைகளாக்கி வைத்திருக்கிறார்கள். பெண்கள் எழுச்சியுற வேண்டும். சமுதாயத்தில் ஆண்களோடு பெண்கள் சமபங்கு பெறவேண்டும். ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமான நிலைபெற தி. மு. கழகம் பாடுபட்டு வருகிறது. அதற்காக மகளிர் மன்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். அரசியலுக்கு வரும் பெண்கள் நல்ல கட்டுப்பாடுடன் நடந்துகொள்ள வேண்டும்." (ந. நி.).

சோழவந்தானில்
'நம் நாடு' விற்பனை உரிமையாளர்
எ. ஆர். வெங்கடேஸ்வரன்
ஜெனரல் நியூஸ் ஏஜென்சி
ஸ்ரீ நரசிம்ம விலாசம்.
சோழவந்தான்
(மதுரை மாவட்டம்).

தார் கம்பெனிகள் கதவடைப்பு

தி. மு. க. கண்டனம்

சென்னை தொண்டையார் பேட்டையில் ஐ. எம். எம். சி., இ. ஐ. ஐ. எம்., டி. என். கே. ஜி., ஓரியண்டல் என்னும் நான்கு தனித் தனி பிரிவுகளைக் கொண்டு, தார் கம்பெனி என்னும் பொது பெயருடன் 20 வருடங்களாக இயங்கிவருகிறது. இத் தொழிற்சாலையின் அதிபர், காரணமின்றி, 18—6—57 முதல் தொழிற்சாலையை கதவடைப்பு செய்ததை தி. மு. கழக 1-வது வட்ட செயற்குழு கண்டிப்பதோடு மேற்படி தொழிலாளர் போராட் ஆதரவு தரும்படி பொது மக்களை கேட்டுக்கொள்ளுகின்றது.

துணிமீது விற்பனை வரி உயர்வா?

ஆந்திரத்தில் கண்டனம்

ஐதராபாத், ஜூன் 25—

ஆலைகளில் தயாரிக்கப்படும் துணிமீது விதிக்கப்படும் விற்பனை வரியை சமீபத்தில் ஆந்திரம் உயர்த்தியுள்ளது.

இதைக் கண்டித்து மொத்த வியாபாரிகள் கிளர்ச்சி செய்ய முடிவு செய்துள்ளனர்.

இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இன்று ஐதராபாத்தில் எல்லாக் கடைகளும் மூடப்பட்டனவாம்! இதனால் நகரில் வாணிபம் பாதிக்கப்பட்டதாம்!

புதிய வரிகள் கிடையாதாம்!

பம்பாய், ஜூன் 25—

1957—58ம் ஆண்டு பம்பாய் அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 3 கோடிக்குமேல் துண்டு விழுகிறது.

பற்றுக்குறையை சமாளிக்க புதுவரி எதும் போடப்படவில்லை.

டாக்டர் பரதன் குமரப்பா காலமானர்

புதுடில்லி, ஜூன் 25—

பிரபல காந்தீயப் பொருளாதார நிபுணரான ஜே. சி. குமரப்பாவின் சோதரர், பரதன் குமரப்பா இன்று காலை புதுடில்லியில் இயற்கையெய்தினர்.

60 வயதான அவர், காந்தியாரின் புத்தகங்களை வெளியிடும் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்தார். காந்தீயப் போராசிரியராக விளங்கிய அவர் கேரளத்தில் ஒரு பிரபல கிறித்துவக் குடும்பத்தில் பிறந்தவர்.

இந்தி வெறியர்களின் கிளர்ச்சிக்கு மக்கள் ஆதரவு இல்லையாம்!

'சீக்கிரமே செத்துவிடும்' என்கிருர் பஞ்சாப் முதலமைச்சர்

புதுடில்லி, ஜூன் 25—

பஞ்சாபில் நடைபெறும் இந்தி மொழி வெறியர்களின் கிளர்ச்சி சீக்கிரமே செத்துப் போகும்; ஏனெனில், மக்களில் எவரும் அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு தரவில்லை"

என்று, பஞ்சாப் முதன் மந்திரியான சர்தார் பிரதாப் சிங் கெய்ரான் தெரிவித்திருக்கிருர்.

"தோல்வி கண்டு பொருமை கொண்ட அரசியல்வாதிகள் தான் இந்தக் கிளர்ச்சியை நடத்துகிருர்கள்; குழப்பம் விளைவிக்க விரும்புகிருர்கள்" என்றும் அந்த முதலமைச்சர் கூறியிருக்கிருர்.

ரூ. 80 கோடி கடன்

விவசாயிகளுக்குத் தரப்படுமாம்

புதுடில்லி, ஜூன் 25—

விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு இந்த 1957—58-ம் ஆண்டில் ரூ. 80 கோடி வரை கடன் வழங்குவது என்று திட்டக் குழு, மற்றும் ரிசர்வ் பாங்கியின் ஆலோசனையின்பேரில் டில்லி சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சீன மற்றும் கீழ்திசை நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து அனுபவமும் அறிவும் பெற்ற கிருஷ்ணப்பா குழுவினர், உற்பத்திப் பெருக்கத்திற்காகக் கூறிய சிபாரிசுகளை அமுல் செய்யும் நோக்குடனேயே இந்த முடிவு மேற் கொள்ளப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இரண்டாம் திட்ட காலத்தில் ரூ. 200 கோடி வரை இதுபோல கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் கொடுப்பது என்று முடிவாகியிருப்பதாகவும், கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை விதிகளை எளியனவாக்குவது பற்றி மாநில சர்க்கார்களுடன் மத்திய சர்க்கார் கடிதப்போக்குவரத்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

1956-ம் ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மொத்த கார்களின் எண்ணிக்கை 32,138 - ஆகும்; இது முன்னைய ஆண்டை விட 40 சத விகிதமாக உயர்ந்திருக்கிறது.

1956-ல் தயாரிக்கப்பட்ட கார்களின் விவரம்: கார்கள் 12 989; ஸ்டேஷன் வாகன்கள் 677; ஜீப்புகள் 4,328; டிராக்குகள் 14,144.

1953-ல் 13,926 கார்களும், 1954-ல் 14,462 கார்களும் தயாரிக்கப்பட்டதாம்.

தென்கொரியப் படைகள் அழைக்கப்பட்டதேன்?

போருக்கான சூழ்நிலையா?

சியோல், ஜூன் 24—

போர் நிறுத்த எல்லையை மீறி 19 கம்யூனிஸ்டு விமானங்கள் 4 பிரிவுகளாக மத்திய கொரியாவில் கும்ஹியாவுக்குச் சமீபத்தில் தெற்கே பறந்து சென்றதாம்.

'போர் நிலையை சமாளிக்க மக்கள் தயாராக இருக்கவேண்டும்' என்று எச்சரிக்கை செய்யப்பட்டனராம்;

அந்நிய துருப்புகளை வாபஸ் பெற்று, இரு கொரியாக்களையும் ஒன்ருக இணைக்க வேண்டும் என்று 2,000 வட கொரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினராம்.

இதற்கு முன்பு விடுமுறையிலிருந்த தென் கொரியப் படைகள் அனைத்தும் அவசர முன்னெச்சரிக்கை ஏற்பாட்டின்படி திரும்ப அழைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

சென்னை சட்ட சபைக் கூட்டம் ஆரம்பம்

சென்னை, ஜூன் 26—

27-ந் தேதி வியாழனன்று சென்னை சட்டசபை கூடுகிறது; அன்று மட்டும் காலை 11 மணிக்கு சபை கூடும்; மற்ற நாட்களில் காலை 9 மணிக்குத் துவங்கி பகல் 2 மணி வரையில் கூட்டம் நடைபெறுமாம்.

29-ந் தேதி சனியன்று காலை 11 மணிக்கு நிதி அமைச்சர் வரவு—செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பிப்பார்.

வழக்காடும் செலவில்

சிக்கனம் கடைப்பிடிக்கப்படுமாம்

புதுடில்லி, ஜூன் 25—

பல்வேறு மாநிலங்களின் நீதி மன்றங்களிலும் இந்திய உயர்நீதி மன்றத்திலும் ஏற்படும் செலவுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் மத்திய அரசாங்கம், வழக்கு நடத்தும் நிறுவனத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை இந்திய அரசாங்க சட்ட இலாகா கண்டுபிடித்து வருவதாகத் தெரிகிறது.

'சிங்கப்பூர் இரட்டை காலனியாகும்'

சுயாட்சி குறித்து டேவிட் மார்ஷல் எச்சரிக்கை

பூரண சுதந்திரம் வேண்டுமென வற்புறுத்துகிருர்

சிங்கப்பூர், ஜூன் 23—

".சுய ஆட்சி பெற்ற பிறகு சிங்கப்பூர் இரட்டை காலனியாகிவிடும்"

என்று, சிங்கப்பூரின் முன்னுள் முதன் மந்தியான டேவிட் மார்ஷல், கவலையோடு எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

"சுயாட்சி பெற்ற பிறகும் சிங்கப்பூர், தொடர்ந்து பிரிட்டிஷாரால் சுரண்டப்படும் நிலையிருக்கும்; அதே போது, சிங்கப்பூரை எப்போதும் ஆழ்ந்த சந்தேகத்துடன் நோக்கும் (மலாயா) பெடரேஷன், உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கவுன்சில்மூலம்(பாதுகாப்புக் கவுன்சிலில் மூன்று சிங்கப்பூர் உறுப்பினர்கள், மூன்று பிரிட்டிஷ் உறுப்பினர்கள், ஒரு பெடரேஷன் உறுப்பினர் இருப்பர்.) சிங்கப்பூரை அடக்கி ஆள நினைக்கும்.

"இந்த நிலைக்கு — பூரண சுதந்திரம் கிடைக்கப்பெருத இந்த நிலைக்கு, இப்போது பதவியிலிருக்கும் லிம் யீ ஹாக்தான் காரணம்,"

என்றும் டேவிட் மார்ஷல் கூறியிருக்கிருர்.

"பெரும்பாலும் இந்தியர்களையே கொண்ட சுமார் 16,000 பேரடங்கிய இராணுவ சிவில் இலாகா ஊழியர்களிடைப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிய மார்ஷல், 'எதிர்பார்த்த வகையில் லிம் யீ ஹாக் நடந்துகொள்ள கொள்ளவில்லை' என்றும் குற்றம் சாட்டினர்.

"உண்மையான தேசியவாதிகள், இப்போது கிடைக்கப் பெறும் சுயாட்சி குறித்து கவலைப்பட வேண்டியவர்களாயும், சந்தேகப்பட வேண்டியவர்களாயும், அச்சம் கொண்டவர்களாயும் இருக்கின்றனர்"

என்றும், மார்ஷல் கூறியிருக்கிருர்.

சிங்கப்பூருக்கு முழுச் சுதந்திரம் கிடைப்பதற்காகப் போராட கம்யூனிஸ்டல்லாத ஒரு இடதுசாரிக் கட்சி தேவை என்றும், அது தொழிலாளர் கட்சியாய் இருக்க வேண்டும் என்றும் மார்ஷல் கருத்தறிவித்திருப்பதுடன், தாமே அப்படி ஒரு கட்சி உருவாவதில் முழு ஆதரவும் தருவதற்குச் சித்தமாயிருப்பதாயும் தெரிவித்திருக்கிருர்.

மாணவர்களும், எழுத்தாளர்களும்
என்றும் விரும்புவது
ஆக்ஸ்போர்ட் இங்க்
OXFORD INK
★
எல்லா கடைகளிலும் கிடைக்கும்

நெல்லை மாவட்டச் செயலாளர் தேர்தல் முடிவு

சங்கரன்கோவில், ஜூன் 26—

23—6—57 பகல் 2-30 மணி அளவில், தூத்துக்குடி எண் 7, ரகுமதுல்லாபுரம் மஜீத் மன்ற இல்லத்தில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நெல்லை மாவட்டத் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

நிறைவேற்றிய தீர்மானம்

கழக வளர்ச்சிக்காக நெல்லை மாவட்டத்திலும் குறிப்பாக தூத்துக்குடி நகரிலும் அரும்பணியாற்றிவந்த தி. மு. கழக மத்திய செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழக செயலாளரும், தொழிற் சங்கத் தலைவருமான தோழர் கே. வி. கே. சாமி; தி. மு. கழக உறுப்பினரும் தொழிற் சங்கத் தலைவருமான தோழர் கே. தாளமுத்து ஆகியோரின் மறைவுக்கு இக்கூட்டம் மிகமிக வருந்துவதுடன், அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாவட்டச் செயலாளர் தேர்தல்

மாவட்டச் செயலாளர் தேர்தலுக்கு தோழர்கள் எம். எஸ். சிவசாமி, சிங்கை சு. கந்தசாமி, பண்டரிநாதன், ஓ. வி. ராசா, டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிட்டனர்.

தேர்தல் நேரத்தில் தோழர்கள் எம். எஸ். சிவசாமி, சு. கந்தசாமி ஆகிய இருவரும் தங்கள் பெயர்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதால் ஏனைய மூவரான பண்டரிநாதன், ஓ. வி. ராசா, டி. ஆர். சுப்பிரமணியம் மாவட்டச் செயலாளர் பொறுப்புக்குப் போட்டியிட்டனர்.

தேர்தல் சட்டதிட்டப்படி நடைபெற்றது.

தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் 28 வாக்குகளும், தோழர் பண்டரிநாதன் 11 வாக்குகளும், ஓ. வி. ராசா 2 வாக்குகளும் பெற்றனர்.

அதிக வாக்குகள் பெற்ற தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொதுக்குழு உறுப்பினர் தேர்தல்

காலியான இரண்டு பொதுக் குழு உறுப்பினர் தேர்தலில் ஏழு பேர்கள் கலந்துகொண்டதில் அதிக வாக்குகள் பெற்ற தோழர்கள் அரியமுத்து, இரத்தின வேல்பாண்டியன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், தோழர்கள் எம். எஸ். சிவசாமி, சு. கந்தசாமி, குலசேகரன், சண்முகம், அலிசேக் மன்சூர் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரை பாராட்டிப் பேசினர்.

இறுதியாக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், நெல்லை மாவட்டத்தின் பணியினை விவரித்துப்பேசியபின், மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் நன்றி தெரிவித்து பேசியபின் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. நி.)

கழகக் கூட்டங்கள்

★

அய்யம்பேட்டை:
(தஞ்சை மாவட்டம்)
சினிமாக் கொட்டகை மைதானம்
28—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். உலகநாதன்
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.

★

திருப்பனந்தாள்:
(தஞ்சை மாவட்டம்)
கடைத் தெருவில்
27-6-57 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: மு. முத்தலிப்பு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
கே. கே. நீலமேகம்
சு. பத்மநாபன்

★

வாள் அமர்கோட்டை:
அறிஞர் திடலில்
28—6—57 மாலை 5½ மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: கூ.. நாகராசு
பேசுவோர்.
நெடுமாறன்
முக. மீரா
ந. தர்மலிங்கம்
(மாலை 5-மணிக்கு பாளக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி அறிஞர் திடலில் கொடியேற்றுவிழாவுடன்முடிவுறும்)

நெசவாளர் கூட்டுறவு சங்க மாநாடு

சென்னை-எழும்பூர் பாந்தியன் நெடுஞ்சாலை 34-ம் எண்ணுள்ள 'பாலசுந்தரம் கட்டிட'த்தில் 27—6—57 அன்று காலை 10-மணிக்கு சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மாநாடு நடைபெறும். தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் மாநாட்டை துவக்கிவைப்பார்.

மக்கள் தொகை உயர்வு

ரஷ்யாவின் நிலைமை

மாஸ்கோ, ஜூன் 24—

புரட்சிக் காலத்திற்கு முன்பிருந்த மக்கள் தொகையைவிட 1956-ல், ரஷ்யாவில் 4 கோடி மக்கள் அதிகமாக வாழ்கின்றனர் என்றும், இப்போது ரஷ்யாவில் வாழும் மக்களின் எண்ணிக்கை 20 கோடி என்றும் மதிப்பிடப்பட்டு அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இரயில்களில் அளவு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'அண்மையில் இரயில்வே மந்திரி பம்பாயில் பேசும்போது, மூன்ரும் வகுப்பில் கூட்டம்குறைவதற்கான நடவடிக்கைகள் இப்போது இல்லை என்று தெரிவித்திருப்பது பெரும் ஏமாற்றம் தருவதாகும் என்பதோடு, இப்போது அவர்கள் அதிகமான கட்டணம் வேறு செலுத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது' என்றும் அவர் கண்டனம் தெரிவித்திருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இரா செழியன் எம்.ஏ